# பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

இலக்கம் 20, வோட் பிளேஸ்
கொழும்பு 07.


2017.02.20

**ஆணைக் குழுச் சுற்றறிக்கை இலக்கம் : 07/2017**

பல்கலைக்கழகத் துணை வேந்தர்கள்

வளாக அதிபதிகள்

நிறுவகப் பணிப்பாளர்கள்

**கணனிப் பயன்பாடுகள் உதவியாளர் (Computer Application Assistant) தரம் III தரம் II தரம் I, பதவிநிலை உதவியாளர் (கணனிப் பயன்பாடுகள்) மற்றும் சிரேஷ்ட பதவிநிலை உதவியாளர் (கணனிப் பயன்பாடுகள்) பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு நடைமுறைகள்.**

2013.12.20 ஆம் திகதிய 17/2013 ஆம் இலக்க தாபனச் சுற்றறிக்கை மற்றும் 2015.09.17 ஆம் திகதிய 12/2015 ஆம் இலக்க ஆணைக் குழுச் சுற்றறிக்கை ஊடாக திருத்தியமைக்கப்பட்ட 2002.07.03 ஆம் திகதிய 804 ஆம் இலக்க ஆணைக் குழுச் சுற்றறிக்கையில் விதித்துரைக்கப்பட்டுள்ள மேற்குறிப்பிடப்பட்ட பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு நடைமுறை மீது தங்களது கவனம் ஈர்க்கப்படுகின்றது.

02. கணனிப் பயன்பாடுகள் உதவியாளர் தரம் III இனைச் சேர்ந்த உத்தியோகத்தர்களை தரம் II இற்கு பதவி உயர்த்துவதற்காக எழுதுவினைஞர் மற்றும் இணையான தரங்களைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்காக நடாத்தப்படும் எழுத்து மூலப் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும் என்ற 17/2013 ஆம் இலக்க தாபனச் சுற்றறிக்கையின் ஊடாக ஏற்படுத்தப்பட்டிருந்த தேவையைக் கருத்திற் கொண்டு, கணனிப் பயன்பாடுகள் உதவியாளர் தரம் I, பதவிநிலை உதவியாளர் (கணனிப் பயன்பாடுகள்) போன்ற பதவிகளுக்காக தற்போது அமுலில் இருக்கும் ஆட்சேர்ப்பு நடைமுறையின் ஆட்சேர்ப்பு முறையின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள "பரீட்சை", தரம் II இற்கு பதவி உயர்த்துவதற்கான எழுத்து மூலப் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும் என்ற தேவை 17/2013 ஆம் இலக்க தாபனச் சுற்றறிக்கை ஊடாக விதிக்கப்பட்ட கணனிப் பயன்பாடுகள் உதவியாளர் தரம் III இனைச் சேர்ந்த உத்தியோகத்தர்களின் முதலாவது அணி (batch) முதல் அமுலுக்கு வரும் வகையில் நீக்குவதற்கு 2017.02.02 ஆம் திகதி கூடிய பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் 958 ஆவது கூட்டத் தொடரின்போது தீர்மானிக்கப்பட்டது.

03. எவ்வாறாயினும் 804 ஆம் இலக்க ஆணைக் குழுச் சுற்றறிக்கையில் விதிக்கப்பட்டுள்ள ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் அந்தத் தரங்களுக்கு பதவி உயர்த்தப்பட்டு தற்போது கணனிப் பயன்பாடுகள் உதவியாளர் தரம் II , தரம் I போன்ற தரங்களில் பதவி வகிப்பவர்கள் 804 ஆம் இலக்க ஆணைக் குழுச் சுற்றறிக்கையின் ஆட்சேர்ப்பு நடைமுறையினையே பின்பற்றி சந்தர்ப்பத்திற்கேற்ப கணனிப் பயன்பாடுகள் உதவியாளர் தரம் I / பதவிநிலை உதவியாளர் (கணனிப் பயன்பாடுகள்) போன்ற பதவிகளுக்கான அவர்களது அடுத்த அண்மித்த பதவி உயர்வுகளுக்காக கவனத்திற்கொள்ளப்படல் வேண்டும். அவ்வாறான ஊழியர்களின் அடுத்து மேற்கொள்ளப்படும் பதவி உயர்வு / பதவி உயர்வுகள் மேலே 2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தீர்மானத்திற்கமைய சந்தர்ப்பத்திற்கேற்ப நேர்முகப் பரீட்சை / கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை ஊடாக கவனத்திற்கொள்ளப்படல் வேண்டும்.

04. தயவு செய்து இதன் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளவும்.

ஒப்பம்: பேராசிரியர் மொஹான் த சில்வா
தலைவர்

பிரதிகள்:-

1. செயலாளர், பல்கலைக்கழகக் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு.
2. தலைவர் அலுவலகம், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
3. உப தலைவர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
4. உறுப்பினர்கள், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
5. செயலாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
6. பீடாதிபதிகள்
7. பல்கலைக்கழகங்களின் பதிவாளர்கள்
8. கணக்காளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
9. பல்கலைக்கழகங்களின் நிதிப் பொறுப்பாளர்கள் (Bursars)
10. நூலகர்கள்/ சிரேஷ்ட உதவி நூலகர்கள் / உதவி நூலகர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள்.
11. பிரதிப் பதிவாளர்கள் / சிரேஷ்ட உதவிப் பதிவாளர்கள் / உதவிப் பதிவாளர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள் / வளாகங்கள்
12. பிரதி நிதிப் பொறுப்பாளரகள் / சிரேஷ்ட உதவி நிதிப் பொறுப்பாளர்கள் / உதவி நிதிப் பொறுப்பாளர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள் / வளாகங்கள்
13. உள்ளகக் கணக்காய்வாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
14. பல்கலைக்கழகங்களின் அரசாங்க கணக்காய்வு அத்தியட்சகர்கள்
15. உயர் கல்வி நிறுவகங்களின் சிரேஷ்ட உதவி உள்ளகக் கணக்காய்வாளர்கள் / உதவி உள்ளகக் கணக்காய்வாளர்கள்.
16. தொழிற்சங்களின் செயலாளர்கள்.
17. கணக்காய்வாளர் நாயகம்.

கோப்பு இலக்கம் : UGC/HR/2/3/199